**கவனிக்க.**- *11.04.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1859 - 2014 අප්‍රේල් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.04.17

*1859 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 620 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 623 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவு திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2014, மே மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## குண்டசாலை - பிரதேச சபை

மத்திய மாகாண அரசாங்க சேவையில் வெற்றிடங்களை நிரப்புதல்

மத்திய மாகாண அரசாங்க சேவையில் குண்டசாலை பிரதேச சபையில் நிலவும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பதவிகளின் ஆட்சேர்ப்புக்காக அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட குண்டசாலை பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகளும் வேறு தகைமைகளும் | சம்பள அளவுத் திட்டம் | நியமனம் செய்தல் |
|---|---|---|---|---|---|
| 1 | பாதைகள் தொழிலாளர் III | 01 | க. பொ. த. (சா.தர) பரீட்சையில் அல்லது தேசிய க.பொ.த (சா.தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது ஏதாவது 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். | PL-I 2006 A - 11730 - 10X120-10X130-10X145 12X160-ரூபா 17600 | வாய்மொழிப் பரீட்சை |
| 2 | தகனப்பீட இயந்திர இயக்குநர் உதவியாளர் | 01 | க. பொ. த. (சா.தர) பரீட்சையில் அல்லது தேசிய க.பொ.த (சா.தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது ஏதாவது 6 பாடங்களில்சித்தியடைந்திருக்க வேண்டும். | PL-I 2006 A - 11730- 10X120-10X130-10X145 12X160-ரூபா17600 | வாய்மொழிப் பரீட்சை |
| 3 | தகனப்பீட இயக்குநர் | 01 | க. பொ. த. (சா. தர) பரீட்சையில் அல்லது தேசிய க.பொ.த (சா.தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியுடன் இரண்டு பாடங்களுக்கு திறமை சித்தியுடன் ஏதாவது 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். | PL-2 2006 A - 11730- 12210-10X130-10X145 10-160-12X170-ரூபா18600 | வாய்மொழிப் பரீட்சை |
| 4 | சுகாதார தொழிலாளர் | 03 | ஆகக் குறைந்தது 8 ஆம் வகுப்பு ஆண்டு 9 சித்தி பெற்றிருக்க வேண்டும். | PL-I 2006 A - 11730- -10X120-10X130- 10X145-12X160-ரூபா 17600 | வாய்மொழிப் பரீட்சை |
| 5 | சிறு நிர்வாகி வேலைகள் சேவை | 01 | சிங்களம் தமிழ் அல்லது கணித விஞ்ஞானம் அல்லது சுகாதார கல்வி ஆகியவற்றோடு 5 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும் அல்லது கல்வி பொது சாதாரண தர பரீட்சையில் 6 பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டும். க.பொ.த. சாதாரண பரீட்சையில் சிங்களம், தமிழ் கணிதம் சுகாதாரம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றதோடு இரண்டு தடவைகளில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அல்லது சிங்களம், தமிழ் ,கணிதம் ,சுகாதாரம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றதோடு உள்ளூராட்சி திணைக்களத்தில் வேலை செய்பவர் அல்லது உள்ளூராட்சியில் 10 | MN-I 2006 A - 13120- 10X145-11X170-10X240- 10X320-ரூபா 22,040 | வாய்மொழிப் பரீட்சை |

| தொடர் இலக்கம் | பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகளும் வேறு தகைமைகளும் | சம்பள அளவுத் திட்டம் | நியமனம் செய்தல் |
|---|---|---|---|---|---|
| | | | வருடங்கள் முழுமையான வேலை செய்திருப்பதோடு 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும். | | |
| 6 | சிறு நிர்வாகி சுகாதாரம் | 01 | சிங்களம் தமிழ் அல்லது கணிதம் விஞ்ஞானம் அல்லது சுகாதாரக் கல்வி ஆகியவற்றோடு 5 பாடங் களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அல்லது கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சையில் 6 பாடங் கள் சித்தி பெற்றிருக்க வேண்டும். க. பொ. த. சாதாரணர பரீட்சையில் சிங்களம், தமிழ், கணிதம், சுகாதாரம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றதோடு இரண்டு தடவைகளில் 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.அல்லது சிங்களம், தமிழ், கணிதம், சுகாதாரம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றதோடு உள்ளூராட்சித் திணைக்களத்தில் வேலை செய்பவர் அல்லது உள்ளூராட்சியில் 10 வருடங்கள் முழுமையான வேலை செய்திருப்ப தோடு 8 ஆம் வகுப்பு சித்தியடைந் திருத்தல் வேண்டும். | MN-1 2006 A - 13120-10X145-11X170-10X240-10X320-ரூபா 22,040 | வாய்மொழிப் பரீட்சை |
| 7 | காவலாளர் | 01 | இரண்டு தடவைகள் க.பொ.த. சாதாரண பரீட்சையில், தேசிய க.பொ.த. பரீட்சையில் சிங்கள, தமிழ் பாடங்களோடு 06 பாடங்கள் சித்திபெற்றிருத்தல் வேண்டும். | PL-I 2006 A - 11730 - 10X120-10X130-10X145 12X160-ரூபா 17,600 | வாய்மொழிப் பரீட்சை |
| 8 | நூலக உதவியாளர் III | 01 | க.பொ.த. (சா.தர) பரீட்சையில் அல்லது தேசிய க.பொ.த. (சா.தர)பரீட்சையில் சிங்களம் அல்லதுதமிழ் மொழியுடன் இரண்டு தடவைகளுக்கு மேற் படாது ஏதாவது 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். | PL-I 2006 A - 11730 - 10X120-10X130-10X145 12X160-ரூபா 17,600 | வாய்மொழிப் பரீட்சை |

1 .**நியமனம் செய்யும் பொது நிபந்தனைகள்**

1. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித்தினத்திற்கு 18 வயதிற்குக் குறையாத 45 வயதிற்கு மேற்படாதும் இருக்க வேண்டும். தற்போதுஅரச சேவையில் நிலையான பதவியிலிருப்பவர்களுக்கு ஆகக் கூடிய வயதெல்லை பொருத்தமற்றதாகும்.
3. மத்திய மாகாணத்தில் 03 வருடங்கள் நிரந்தர விதிவிடவாளராக இருக்க வேண்டும். வாக்காளர் இடாப்பின் பெயர் பட்டியலின் படி அல்லது பிரதேச செயலாளர் அவர்களால் வழங்கப்படும் சான்றிதழின் மூலம் அது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
4. குண்டசாலை பிரதேச அதிகாரப் பிரதேசத்தின் நிலையான வதிவாளர்களுக்கு மேலான முன்னுரிமை வழங்கப்படும்.
5. நல்ல ஒழுக்கமுடைய நல்ல சுகதேகியாக இருக்க வேண்டும்.
6. குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றமொன்றில் தண்டனை பெறாதவராக இருக்க வேண்டும்.
7. அரச சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து இடைநிறுத்தப்படாதவராக இருக்க வேண்டும்.
8. அரச நிர்வாக சுற்று நிருப இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராக இருக்கக் கூடாது.
9. தற்போது குண்டசாலை பிரதேச சபையில் சமயோசித, நாளாந்த, தற்காலிக, ஒப்பந்த , தொண்டர், நிலையான அடிப்படையில் சேவையலீடுபட்டவர்கள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்படும்.

10. விண்ணப்பம் கோரப்பட்ட அல்லது கோரப்படும் காலத்தில் மத்திய மாகாணத்தில் இப்பதவிகளுக்குரிய புதிய நியமனம் செய்யும் ஒழுங்கு விதிகள் திருத்தப்படுதல், யாப்புக்கள், சேர்த்துக்கொள்ளப்படுதல், நியமனங்களை காலதாமத மாக்குதல், மாற்றுதல், இந்த அறிவித்தலை இரத்து செய்தல் அல்லது திருத்துதல் குண்டசாலை பிரதேச சபை செயலாளருக் குரியதாகும்.

**2. சேவையில் ஈடுபடுத்தப்படும் நிபந்தனைகள் :**

(1) இந்தப்பதவி நிரந்தரமானதும். ஒய்வூதியத்துடன் கூடியது. மூன்று வருட நன்னடத்தை காலத்திற்குட்பட்டது. நிரந்தர ஊழியர்கள் 1 வருட கால சேவை தகுதிகாண் காலத் திற்குட்படுவர்.

(2) விதவைகள் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவிற்கு உடன்படல் வேண்டும் ;

(3) அரச மொழிக் கொள்கைக்குட்படல் வேண்டும்;

(4) இந்த நியமன நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் நிபந்தனைகளுக்கும் /அரச நிதிப் பிரமாணங்களுக்கும் /அரசின் திணைக்கள கட்டளைகளுக்கும் / மத்திய மாகாண சபையின் அல்லது குண்டசாலை பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் நிபந்தனைகளுக்கும் ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கு கட்டுப்பட வேண்டும்.

3. தகுதியுடைய விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் கீழே காணப்படும் ஆவணங்களின் போட்டோ பிரதிகள் இணைத்து அனுப்பப்படல் வேண்டும் :-

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ் ;
3. தேசிய அடையாள அட்டையின்பிரதி ;
4. வதிவிடம் பற்றிய பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
5. அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ்;
6. அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் ;
7. வேறு தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.

4. தொழில் தகவல்களுடன் முழுமையான சுய விபரங்கள் அடங்கிய கீழே காணப்படும் விதத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை சம்பந்தப்பட்ட சகல சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2014.04.30 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு கீழே காணப்படும் விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அல்லது நேரிலோ கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்.

5. விண்ணப்பப்படிவத்தினை உறையிலிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

6. தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் அனுப்ப வேண்டும்.

7. குறிப்பிட்ட தினத்திற்கு பிறகு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
குண்டசாலை பிரதேச சபை,

குண்டசாலை பிரதேச சபை அலுவலகம்,
மெனிக்கின்ன.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**குண்டசாலை பிரதேச சபை**

*குண்டசாலை பிரதேச சபையின் ................... பதவிக்கான விண்ணப்பம்*

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

முதலெழுத்துக்குரிய பெயர்கள் :----.

2. நிரந்தர முகவரி :----.

3. பிறந்த திகதி : ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

4. ஆணா/பெண்ணா :----.

5. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

7. திருமணமானவர்/ ஆகாதவர் :----.

8. கல்வித் தகைமைகள்:

8.1 விண்ணப்பதாரர் இறுதியாக சித்தியடைந்த வகுப்பு :

சிங்களம் :-----. தமிழ் :----.

8.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை :

(i) வருடம் :-----. மாதம் :----

(ii) பரீட்சை சுட்டெண் :----.

(iii) பெறுபேறு :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

8.3 க. பொ. த. (உ. த.) பரீட்சை :

(i) வருடம் :-----. மாதம் :----

(ii) பரீட்சை இலக்கம் :----.

(iii) பெறுபேறு :----.

| பாடம் | சித்தி |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

9. தொழில் தகைமையும் அனுபவமும் :----.

10 வேறுதகைமைகள் :----.

13. நீங்கள் எப்போதாவது குற்றமொன்றிற்காக நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? :-----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்குமேற்ப உண்மையானதும் சரியானதுமெனத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நியமனங்கள் சம்பந்தமான நிபந்தனைகளுக்கேற்ப என்னால் பிழையான தகவல் வழங்கப் பட்டுள்ளதென்று உறுதிப்படுத்தப்படுமாயின் நியமிக்கப்படுவதற்கு முன்பு தகுதியற்றவர் ஆவதற்கும் நியமனத்தின் பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----

**திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

(அரச சேவையில்/மாகாண அரச சேவையில் /அரச கூட்டுத்தாகனம்/ சட்டரீதியான சபைகளில் சேவையிலீடுபட்டுள்ள விண்ணப் பதாரிகளுக்கு மட்டும்)

இந்த நிறுவனத்தில் ................பதவி வகிக்கும் ........................ ..................... அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவரது சேவை திருப்திகரமானதென்றும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லையென்றும், அது பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு எண்ணப்படவில்லையென்றும் உறுதிப் படுத்துகின்றேன். அவர் இப் பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் தற்போது ஈடுபட்டுள்ள சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. என்றும் உறுதி கூறுகின்றேன்.

---------------------,
நிறுவனத் தலைவரது கையொப்பம்.

பெயர் :-----.
பதவியின் பெயர் :-----.
திணைக்களம்/ நிறுவனம் :-----.
(பதவி முத்திரையை இடவும்)
திகதி :-----.

4-497

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பதுளை மாநகர சபை

( 252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 159 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(252 ஆம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 277 (4) மற்றும் 159 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இவ்வறிவித்தல் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாள் முதல் இங்கு கீழ் கூறப்பட்டுள்ள பொதுவான வீதி எல்லைகளுள் நடைபாதை மேடைகளில் வைத்து எந்தவொரு பொருள் விற்பனை அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தல் என்னால் தடைசெய்யப்படும் என்பதை பதுளை மாநகர சபையின் நகர பிதா உபாலி நிஸ்ஸங்க குணசேகர ஆகிய நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

1. பஸார் வீதி மணிக்கூட்டுச் சந்தியிலிருந்து லோவர் வீதி சேருமிடம் வரை

2. லோவர் வீதி வட ஒழுங்கை பிரிந்து செல்லும் சந்தியிலிருந்து விஹாரகொடை சுற்றுவட்டம் வரை

3. புகையிரத நிலைய விஹாரகொடை சுற்றுவட்டம் முதல் புகையிர நிலையம் வரை

4. கனுபெலல்ல பாதை பதுளுஓய குறுக்கேயுள்ள பாலத்திற்கருகில் புகையிரத நிலையத்திற்குத் திரும்பும் நிலையத்திலிருந்து கனுபெலல்ல பாதை மற்றும் மயிலகஸ்தென்ன பாதை (எலதளுவ பாதை) பிரிந்து செல்லும் சந்தி வரை

5. வங்கிப் பாதை விஹாரகொட சுற்றுவட்டத்திலிருந்து வங்கிப்பதை மற்றும் கீழ் இராஜ வீதி பிரிந்து செல்லும் பாதை வரை

6. அஞ்சல் அலுவலகப் பாதை இராஜ வீதி பிரிந்து செல்லும் சந்தியிலிருந்து லோவர் வீதி பிரிந்து செல்லும் சந்தி வரை

7. தர்ம தூத பாதை லோவர் வீதி பிரிந்து செல்லும் சந்தியிலிருந்து ரேஸ்கோஸ் பாதை பிரிந்து செல்லும் சந்தி வரை

8. தெற்கு ஒழுங்கை இராஜ வீதி பிரிந்து செல்லும் சந்தியிலிருந்து லோவர் வீதி பிரிந்து செல்லும் சந்தி வரை

9. **மஹியங்கனை பாதை** மஹியங்கனைப் பாதை, மெதபத்தன பாதைக்குப் பிரிந்து செல்லும் சந்தி வரை

10.**கிளினிக் பாதை இராஜ** வீதி பதுளை வாடி வீட்டுக்கு முன் பிரிந்து செல்லும் ஸ்தானத்தில் (குறுக்கு பாதை) இருந்து கெந்தல எல வரை

11. **பண்டாரவளைப் பாதை** பதுளை வாடி வீட்டுக்கு அருகிலுள்ள சுற்று வட்டம் மற்றும் இராஜவீதி பிரிந்து செல்லும் சந்தியிலிருந்து ஜஜ்ஜஸ் ஹில் பிரியும் சந்தி வரை

12. **இராஜ வீதி** பண்டாரவளைப் பாதை சுற்று வட்டத்திலிருந்து (பதுளை வாடி வீட்டுக்கருகில்) இராஜவீதி மணிக்கூட்டின் இரு பக்கங்களிலுள்ள இரு ஒழுங்கைகள் மற்றும் கீழ் இராஜ வீதி மற்றும் உதயராஜ மாவத்தை ஆரம்ப பிரிந்து செல்லும் சந்தி வரை

13. **பசறைப் பாதை** விஹாரகொட சுற்றுவட்டத்திலிருந்து முதியங்கனை அலுத்எல பாதை மற்றும் ஸ்பிரிங்வெளிப் பாதை ஹிந்தகொடையில் பிரிந்து செல்லும் சந்தி வரை

14. **கெப்பெடிபொல பாதை** வெலேகடை கடைவீதி இரு பக்கங்களிலிருந்து மஹாவித்தியாலய அருகில் அலுத்எல பாதை பிரியும்ஸ்தானம் வரை

இந்தத் தடை உத்தரவை மீறும் யாராவது ஒருவர் நீதிவான் நீதிமன்றத்தில் இருநூறு ரூபா தண்டப் பணத்திற்கு கீழ்ப்படிபவராவார். இவ்விடயங்கள் பற்றி 1974.01.31 ஆந் திகதிய அறிவித்தலை இத்தால் செல்லுபடியற்றதாக்குகின்றேன். எதிர்வரும் வருடங்களுக்கும் இவ்வறிவித்தல் செல்லுபடியாகும்.

சட்டத்தரணி உபாலி நிஸ்ஸங்க குணசேகர,
மாநகர பிதா,
பதுளை.

பதுளை மாநகரசபை அலுவலகம்,
பதுளை,
2014 பெப்புருவரி

4-434

**கம்பஹா மாநகர சபை**

*1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க களியாட்ட விடுதி திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களியாட்ட விடுதிச் சட்டம்*

*கீழே குறிப்பிடப்பட்ட பெயருடையவரால் அவருடைய பெயருக்கு எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள களியாட்ட விடுதியை குறிப்பிட்ட முகவரியில் நடாத்திச் செல்வதற்கு 2014 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக என்னிடத்தில் விண்ணப்பித்துள்ளார் என்பதை 1987 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க களியாட்ட விடுதி திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களியாட்ட விடுதிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவிற்கேற்ப பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.*

*இக் களியாட்ட விடுதிக்கு அருகில் வசிக்கும் பொது மக்கள் எவரேனும் இக்களியாட்ட விடுதிக்கு அனுமதி வழங்கள் தொடர்பில் ஆட்சேனைகள் எதிர்ப்புக்கள் தெரிவிக்க விரும்பின் இவ்வறிவித்தல் வர்த்தமானியில் வெளியாகிய தினத்திலிருந்து நான்கு வாரங்களுக்குள் தமது எதிர்ப்புக்கான காரணங்களை எழுத்து மூலமாக இரண்டு பிரதிகளில் எனக்கு அனுப்பி வைக்கும் படி இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.*

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயரம் முகவரியும்* | *களியாட்ட விடுதியின் செயலாளர் முகாமையாளரா? தலைவரா?* | *களியாட்டவிடுதியின் பெயர்* | *களியாட் விடுதி நடவடிக்கைகளை நடாத்திச் செல்ல எதிர்பார்க்கும் இடம்* |
|---|---|---|---|
| திரு. விமல் கமகே சாந்தி வீதி, கம்பஹா. | செயலாளர் | கம்பஹா விளையாட்டுக் கழகவிடுதி | 15/2/1 மங்கள வீதி, கம்பஹா. |

கே.எம். டப் . பிரேமசந்திர,
மாநகர ஆணையாளர்,
கம்பஹா மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கம்பஹா,

4-561

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.